**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. P.S. ரஷ்கின் ராஜ், பி.ஏ., எல்.எல்.பி.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 08 ம் நாள் திங்கள்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2026 இன்**

**அசல் வழக்கு எண்.50/2025**

1) K. சின்னதாய்

2) K. சுப்பையா

3) K. பாப்பாத்தி

4) K. இசக்கியம்மாள்

5) K. மாரியம்மாள்

6) K. ராமர்

7) M. நாச்சியார்

8) M. பேச்சியம்மாள்

9) M. செல்வவிநாயகம்

10) P. ஆறுமுக அம்மாள்

11) P. கொம்பையா தாஸ்

12) P. கேத்திரம் .... மனுதாரர்கள்/வாதிகள்

// எதிர் //

1) V. மயில்ராஜன்

2) V. சத்தியமூர்த்தி

3) V. மாரியப்பன்

4) V. ஜெயராமன்

5) A. ஆறுமுககனி

6) A. ஜகோர்ட்துரை



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:05 +0530

7) A. வைகுண்டராஜ்

8) M. ராதிகா

9) M. ஆறுமுக பெருமாள்

10) M. மாரிமுத்து .... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 18.04.2026 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. சிவசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. ஏனோஸ் பெஞ்சமின் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 மற்றும் 9, 10 ம் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, மனுவில் கண்டபடி அசல் வழக்குரையில் சீர்த்திருத்தம் செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைசட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 18 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சுருக்கம் :-</u>**

மனுதாரர் அசல் வழக்கில் 6 ம் வாதி என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருக்கின்ற நிலையில் கடந்த 2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 3 வது வாரம் வடகிழக்கு பருவமழை ஆரம்பித்து பெய்த மழையின் காரணமாக பிராது தபசில் சொத்தில் உழவு செய்ய வேண்டி இம்மனுதாரரும், மற்ற மனுதாரர்கள்/வாதிகளும்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:11 +0530

பிராது தபசில் சொத்தினை பார்வையிட சென்ற போது, பிராது தபசில் சொத்தின் கீழ்புறத்தில் சுமார் 3 செண்டு அளவு ஆக்கிரமித்து அதில் 8 வது எதிர்மனுதாரர்/8 வது பிரதிவாதி புதிதாக வீடு கட்டிக் கொண்டிருந்தார் என்றும், மேற்படி வீடானது செங்கற்கட்டுமானங்களால் கட்டப்பட்டு சென்ட்ரிங் அடித்த நிலையில் இருந்தது என்றும், இதனை கண்ணுற்ற மனுதாரர்கள்/வாதிகள் அங்கு நின்று கொண்டிருந்த 8 வது எதிர்மனுதாரர்/8 வது பிரதிவாதியிடம் கேட்ட பொழுது, அவர் அரசாங்க அனுமதியுடன் வீடு கட்டிக் கொண்டு வருவதாக கூறினார் என்றும், பிராது தபசில் சொத்தானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மனுதாரர்கள்/வாதிகளை தவிர வேறு எவருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், பிராது தபசில் சொத்தில் வீடு கட்ட அனுமதி அளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை கிடையாது என்றும், மேற்படி அரசாங்க அனுமதி என்பது சட்டப்படி செல்லாது என்றும், எனவே, அசல் வழக்கு பிராது தபசில் சொத்தின் கீழ்பகுதி 3 செண்டு நிலத்தில் 8 வது எதிர்மனுதாரர்/8 வது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து புதிதாக ஏற்படுத்தியுள்ள கட்டுமானங்கள் குறித்தும், அந்த கட்டுமானத்தினை அப்புறப்படுத்தி அதன் காலி சுவாதீனத்தை மீட்க வேண்டியும் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள விவரப்படி அசல் வழக்கு பிராதினில் வழக்குரை, வழக்கு மூலம், பிராது தபசில் சொத்து விவரம், நீதிமன்ற முத்திரைக்கட்டணம் மதிப்பீடு, ஆக்கிரமிப்பு கட்டுமானப் பகுதி மற்றும் அதுகுறித்து பரிகாரங்கள் கேட்டு பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், இம்மனு



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:17 +0530

அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும், மாறாக இம்மனு அனுமதிக்காவிடில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) **<u>8 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கல்ல என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கினை முடிவுக்கு கொண்டு வரக்கூடாது மற்றும் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், 8ம் எதிர்மனுதாரர் வழக்குக்கு முன்னதாக தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், அதற்கான ஆவணங்கள் ஏற்கனவே எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள் சொல்லியுள்ளது மனுவுக்காக புனையப்பட்ட கற்பனை கதையாகும் என்றும், 8ம் எதிர்மனுதாரரின் உரிமை மூல ஆவணங்களை பார்வையிட்டே அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது என்றும், எனவே அவ்வனுமதி சட்டப்படி செல்லத்தக்கதாகும் என்றும், மனுதாரர்கள் இந்த 8ம் எதிர்மனுதாரர் அரசு அனுமதியுடன் பெரும் செலவு செய்து வீடு கட்டி குடியிருக்கும் வரை அமைதி காத்து இருந்து அவர் மீது வீண் பொறாமை கொண்டு தபசில் சொத்திலுள்ள வீட்டில் நிம்மதியாக இருக்க விடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினையும், வழக்கினையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர்களின்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:23 +0530

சீர்திருத்த மனுவை இந்த 8ம் எதிர்மனுதாரரின் அதிகப்படியான செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **தீர்வுக்குரிய பிரச்சனை :-**

மனுவில் கண்டபடி அசல் வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில், பிராது தபசில் சொத்தின் கீழ்புறத்தில் சுமார் 3 செண்டு அளவு ஆக்கிரமித்து அதில் 8 வது எதிர்மனுதாரர்/8 வது பிரதிவாதி புதிதாக வீடு ஒன்றை கட்டியுள்ளார் என்றும், மேற்படி வீடானது செங்கற்கட்டுமானங்களால் கட்டப்பட்டு சென்ட்ரிங் அடித்த நிலையில் இருந்தது என்றும், இதனை கண்ணுற்ற மனுதாரர்கள்/வாதிகள் அங்கு நின்று கொண்டிருந்த 8 வது எதிர்மனுதாரர்/8 வது பிரதிவாதியிடம் கேட்ட பொழுது, அவர் அரசாங்க அனுமதியுடன் வீடு கட்டிக் கொண்டு வருவதாக கூறினார் என்றும், பிராது தபசில் சொத்தானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மனுதாரர்கள்/வாதிகளை தவிர வேறு எவருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், பிராது தபசில் சொத்தில் வீடு கட்ட அனுமதி அளிப்பதற்கு அரசாங்கத்திற்கு உரிமை கிடையாது என்றும், மேற்படி அரசாங்க அனுமதி என்பது சட்டப்படி



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:28 +0530

செல்லாது என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**6)** 8ம் எதிர்மனுதாரர் தரப்பில், 8ம் எதிர்மனுதாரர் வழக்குக்கு முன்னதாக தபசில் சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும், அதற்கான ஆவணங்கள் ஏற்கனவே எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள் சொல்லியுள்ளது மனுவுக்காக புனையப்பட்ட கற்பனை கதையாகும் என்றும், 8ம் எதிர்மனுதாரரின் உரிமை மூல ஆவணங்களை பார்வையிட்டே அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது என்றும், எனவே அவ்வனுமதி சட்டப்படி செல்லத்தக்கதாகும் என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கினை முடிவுக்கு கொண்டு வரக்கூடாது மற்றும் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**7)** அசல் வழக்கானது, மனுதாரர்கள்/வாதிகளால், விளம்புகை பரிகாரம் கேட்டும், அதன்பின்னிட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் பிராது தபசில் சொத்தினை பொறுத்து ஏற்படுத்தப்பட்டுள்ள மூலைக்கரைப்பட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள்.1114/2021, 1118/2021, 1123/2021, 170/2023 மற்றும் 174/2023 ஆகிய ஆவணங்கள் மனுதாரர்கள்/வாதிகளின் உரிமையை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது, சட்டப்படி செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:34 +0530

**8)** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். இவ்வழக்கு விசாரணைக்காக நிலுவையில் இருக்கும் போது, அக்டோபர் மாதம் 2025 ம் வருடம் தாவா சொத்தில் 8 ம் பிரதிவாதி புதியதாக வீடு கட்டிக் கொண்டு வருகிறார். அதனை வாதிகள் ஆட்சேபணை செய்தார்கள். மேற்படி ஆட்சேபணையை பொருட்படுத்தாமல் 8 ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி அசல் வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. இதுசம்பந்தமாக தாக்கல் செய்துள்ள எதிருரையில், 8 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. ஏற்கனவே வீடு கட்டி வருகிறார். இந்த விபரம் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது. தற்போது வாதிகள் மனுவில் கூறியுள்ள வழக்கு மூலம் தவறானது. ஆகவே மேற்படி வழக்கு மூலம் தேதி தவறானதா? மனுதாரர்கள்/வாதிகள் சொன்ன தேதியில் 8 ம் பிரதிவாதி வழக்கிடை சொத்தை ஆக்கிரமிப்பு செய்தாரா? மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள பரிகாரம் காலம் கடந்துள்ளதா? என்பது வழக்கு விசாரணையில் தீர்மானிக்க இயலும். தற்போது இத்தகைய சீர்திருத்தம் மனுதாரர்/வாதியை பொறுத்தமட்டில் தேவையானது ஒன்று. எனவே இந்த மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானித்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**10)** முடிவாக, மனுதாரர்கள்/வாதிகள், மனுவில் கண்டபடி தங்களது அசல் வழக்குரையில் சீர்த்திருத்தம் செய்யலாம் என இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:39 +0530

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எழுதி, விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 08 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:45 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.06.09 17:42:52 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நாங்குநேரி,

இ.ம.எண்.3/2026 இன்

அ.வ.எண்.50/2025

நேரிய/வரைவு உத்தரவு

நாள்- 08.06.2026